# வருடாந்த அறிக்கை

# 2019

# அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு

# (SOND)

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு நிறுவனம் கடந்த 21 வருடங்களாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் செயற்பட்டு வருகின்றது. எமது நிறுவனத்தினால் 2019 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் பின்வரும் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

1. மனித விற்பனைக்கு எதிரான முயற்சிகளை வலுப்படுத்தல் செயற்திட்டம் (Strengthening Counter Trafficking Efforts project)
2. சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் செயற்திட்டம் (Social Cohesion and Reconciliation Project)
3. கல்விக்கான உதவி (Education support)
4. தகவல் வளநிலையம் (Information Centre)
5. விசேட செயற்பாடுகள் (Special Activities)

## மனித விற்பனைக்கு எதிரான முயற்சிகளை வலுப்படுத்தல் செயற்திட்டம் (Strengthening Counter Trafficking Efforts project- SCOUT)

IOM நிறுவனத்தின் அனுசரணையுடன் SOND நிறுவனத்தினால் யாழ் மாவட்டத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பளை, கோப்பாய் சாவகச்சேரி, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் மனித விற்பனைக்கு எதிரான முயற்சிகளை வலுப்படுத்தல் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இச் செயற்திட்டமானது மனித விற்பனையை தடுப்பதை நோக்கமாகக் கொண்டது. இதன் முக்கிய செயற்பாடுகளாக அரச அதிகாரிகள், கிராமமட்ட அமைப்புக்கள், இளையோர் ஆகியவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதன் மூலம் சமூகத்தை விழிப்படையச்செய்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவியை பெற்றுக்கொடுத்தல் என்பனவாகும்.

**இச்செயற்திட்டத்தின் பிரதான செயற்பாடுகள் வருமாறு**

- மாவட்ட மட்டத்தில் மாவட்ட மட்ட மற்றும் பிரதேச செயலகர்களுடனான திட்ட அறிமுகக் கூட்டம் நடாத்தப்பட்டமை.
- யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பளை, கோப்பாய் சாவகச்சேரி, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் திட்ட அறிமுகக் கூட்டம் நடாத்தப்பட்டமை.
- பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிநெறி நடாத்தப்பட்டமை.
- யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பளை, கோப்பாய் சாவகச்சேரி, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் அரச அதிகாரிகளுக்கான பயிற்சிநெறி நடாத்தப்பட்டமை.
- யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பளை, கோப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களில் கிராம மட்ட அமைப்புக்களுக்கான பயிற்சிநெறி நடாத்தப்பட்டமை.
- சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் இளையோர்களுக்கான பயிற்சிநெறி நடாத்தப்பட்டமை.
- மாவட்ட மட்டத்தில் மாவட்ட மட்ட மற்றும் பிரதேச உத்தியோகத்தர்களுடனான திட்ட மீளாய்வுக் கூட்டம் நடாத்தப்பட்டமை.





## சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் செயற்திட்டம் (Social Cohesion and Reconciliation Project- SCORE)

### சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் செயற்திட்டத்தின் சமூக மதிப்பீடு

NPC நிறுவனத்தின் அனுசரணையுடன் SOND நிறுவனத்தினால் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 5 கிராமங்களான இளவாலை வடமேற்கு, கொல்லங்கலட்டி, வசாவிளான் கிழக்கு, பலாலி தெற்கு, பளைவீமன்காமம் தெற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் சமூக மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் மூலம் இக்கிராம சேவகர் பிரிவுகளில் காணப்படும் பிரச்சனைகள், தேவைகள் இனங்காணப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்யவதற்கான செயற்பாட்டுக்குழுக்களும் உருவாக்கப்பட்டு சில பிரச்சனைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.





### சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் செயற்திட்டத்தின் அரச அதிகாரிகளுக்கான பயிற்சி

NPC நிறுவனத்தின் அனுசரணையுடன் SOND நிறுவனத்தினால் தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் பணியாற்றும் அரச அதிகாரிகளுக்கான இரண்டு பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டுள்ளன.

**சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் செயற்திட்டத்தின் அரச அதிகாரிகளுக்கான பயிற்சி**

NPC நிறுவனத்தின் அனுசரணையுடன் SOND நிறுவனத்தினால் தெல்லிப்பளை பிரதேச சபை உறுப்பினர்களுக்கான இரண்டு பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டுள்ளன.

**சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான வீதி நாடகங்களை நடாத்துதல்**

சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான 5 வீதி நாடகங்கள் இளவாலை வடமேற்கு கிரம சேவகர் பிரிவில் நடாத்தப்பட்டது.

**சர்வதேச தேசிய சமாதான நிகழ்வு**

இத்திட்டத்தின் முக்கிய நிகழ்வாக சர்வதேச சமாதான தினமும், மாவட்டங்களுக்கிடையிலான பரிமாற்ற வேலைத்திட்ட நிகழ்வும் தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வை சிறப்பிக்க சேருவில பிரதேச சமூக இணைப்பாளர்களும், அரச, அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் (தமிழ், சிங்கள சகோதரர்கள்) யாழ் மண்ணிற்கு வருகை தந்திருந்தனர்.





**மாணவர் மத்தியில் சமாதானத்தை வளர்க்கும் செயற்பாடு**

தேசிய சமாதானப் பேவையின் SCORE திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 3 பாடசாலைகளில் மாணவர் மத்தியில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

முதலாவது நிகழ்வாக பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்களைக் கொண்ட குழு ஒன்றிற்கு மாணவர் மத்தியில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை சிறந்த முறையில் கட்டியெழுப்புவதற்கான ஒரு நாள் பயிற்சியளிக்கப்பட்டது.

மற்றைய நிகழ்வாக பாடசாலைகளில் சமாதான வாரம் கடைப்பிடிக்கப்பட்டு அவ் வாரம் முழுவதும் நல்லிணக்கம் மற்றும் சமாதானம் தொடர்பான நற்சிந்தனைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, மாணவர்களால் சிந்தனைக்குரிய வாசகங்கள் எழுதப்பட்டு வாரத்தின் இறுதி நாள் காட்சிப்படுத்தப்பட்டது.





## கல்விக்கான உதவி (Education support)



பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் வறிய மாணவர்கள் நான்கு பேரிற்கு பட்டப்படிப்பை பூர்த்தி செய்யும் வரை மாதாந்தம் சிறிய பண உதவியை வழங்கி வருகின்றோம்.

மேலும் Country Music foundation (CMF) நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் 105 வறிய மாணவர்களுக்கான கல்வி உபகரணங்களும் 3 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டன.

## தகவல் வளநிலையம் (Information Centre)

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை வழங்கப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் அரச உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவன உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், எமது பணியாளர்கள் ஆகியோர் எமது நூலகத்தில் நூல்களை பெற்று வாசிப்பதன் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

## விசேட செயற்பாடுகள் (Special Activities)

1. **தாய்மார் கழகங்களின் சிறப்பான செயற்பாட்டிற்கான ஊக்குவிப்புத் தொகை வழங்கல் நிகழ்வு**

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் யுனிசெவ் அமைப்பினூடாக சொண்ட் நிறுவனத்தினால் தெல்லிப்பளை பிரதேச செயலகர் பிரிவில் சிறப்பாக இயங்கும் 19 தாய்மார்கழகங்களுக்கு கோப்பாய் பிரதேச செயலகர் பிரிவில் சிறப்பாக இயங்கும் 01 தாய்மார்கழகத்திற்கும் கழக அங்கத்தவர்களை ஊக்குவிப்பதற்கும் அவர்களின் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கும் சிறிய பணத்தொகை வழங்கப்பட்டது.

மேலும் சிறப்பாக இயங்கும் தாய்மார்கழகமான அளவெட்டி சிறீரங்கன் தாய்மார் கழகம் தெரிவு செய்யப்பட்டு அக்கழகத்திற்கு மேலதிக ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்பட்டது.

## 2. விழிப்புணர்வு பலகைகள் காட்சிப்படுத்தல்

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி அனுசரணையுடன் யுனிசெவ் அமைப்பினூடாக சொண்ட் நிறுவனத்தினால் சுகாதாரமும் போசாக்கும் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டக்கூடிய 36 விளம்பர பலகைகள் வீதிகளிலும், வைத்தியசாலைகளிலும் பொது இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மேலும் சிறவர் உரிமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான 8 விழிப்புணர்வு பலகைகளை பாடசாலைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.







## 3. வல்வெட்டிதுறை கடற்கரையை அழகாக்கும் பணி

Chemical society, University of Jaffna, MEPA & SOND ஆகிய நிறுவனங்கள் இணைந்து “Go Green” project இன் ஊடாக பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட வல்வெட்டித்துறை கடற்கரை சுத்தம் செய்யப்பட்டது.



## 4. VCDC & VDP தொடர்பான கூட்டம்



எமது நிறுவனத்தினால் கடந்த வருடத்தில் சிறுவர் பாதுகாப்பு செயற்திட்டம் செயற்படுத்தப்பட்ட பிரதேசங்களான வயாவிளான் கிழக்கு, பலாலி தெற்கு, பலாலி

வடக்கு, பலாலி கிழக்கு ஆகிய கிராமங்களில் இவர்கள் தொடர்ந்து சிறப்பாக செயற்படுவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் VCDC மற்றும் VDP தொடர்பான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

### 5. தாய்மார் கழகங்களுடனான கலந்துரையாடல்

எமது நிறுவனத்தினால் கடந்த வருடத்தில் செயற்படுத்தப்பட்ட சுகாதாரமும் போசாக்கும் செயற்திட்டத்தில் சிறந்த தாய்மார் கழமாக தெரிவு செய்யப்பட்டு உதவித்தொகை வழங்கப்பட்ட தாய்மார்கழக உறுப்பினர்கள் இவர்கள் தொடர்ந்து சிறப்பாக செயற்படுவதற்கு ஊக்கமளிக்கும் வகையிலும் மதிப்பீடு செய்யும் வகையிலும் இக்கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.



### 6. சிறுதொழில் முயற்சிகள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை வழங்கல்

எமது நிறுவனமானது பெண்களுக்கான தொழில்வாய்ப்பை வழங்கும் நோக்கில் யாழ்சக்தி கம்பனியை நடாத்தி வருகின்றது. இதன் முக்கிய உற்பத்தி பொருளாக தட்டை வடை உற்பத்தி செய்யப்படுகின்றது. இக்கம்பனியானது நீர்வேலிப்பகுதியில் அமைந்துள்ளது. இக்கம்பனியின் மூலமாக 11 பணியாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இக்கம்பனியானது இலாபகரமாக செயற்பட்டு வருகின்றது.

### 7. தொண்டர்களுக்கான பயிற்சி.

எமது நிறுவனத்தில் தொண்டர்களாகப் பலர் பணியாற்றுகின்றார்கள். இவர்களுக்கு அறிவு, திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் வழங்கப்படுவதோடு களப் பணிக்கான பயிற்சியிலும் ஈடுபடுகின்றனர். இப்பயிற்சிகள் தொழிலொன்றைத் தேடுவதற்கு உதவியாக உள்ளது.

### 8. வெளியிடப் பயிற்சிகள்.

முன்பள்ளி ஆசிரியர்கள், இளையோர்கள், சமூக நிறுவனத் தலைவர்கள் இலவசமாக அவரவர் இடங்களில் நடாத்தப்பட்டு வருகின்றது.

தொடர்புகள்:

ச.செந்துராசா
நிறைவேற்றுப் பணிப்பாளர்
**SOND**
18/10 வைமன் வீதி நல்லூர்.
E mail: senthu@eureka.lk
www.sond.lk